**சுருக்கம்**

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் - 2005-2006ம் ஆண்டு பகுதி –II திட்டம் - ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் சார்ந்த - தொலைக்காட்சி வழி கல்வி தயாரிப்பதற்கான மென்பொருள் செலவினம் அனுமதித்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (யு2)த் துறை**

அரசாணை (நிலை) எண். 64
நாள்: 16.05.2005

படிக்கப்பட்டவை:-

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் கடிதம் Rc.No.14879/B2/2004 நாள் 6.1.2005.

-----

**ஆணை:**

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் சார்ந்த கல்வி தொலைக்காட்சி படப்பதிவு நிலையத்தில் பாடநூல் தொடர்புடைய ஒலி நிகழ்ச்சிகளும், ஒளி நிகழ்ச்சிகளும் கூடுதலாக தயாரிக்கவும் படப்பதிவு நிலையத்தில் தயாரிக்கப்பட்ட ஒலி நிகழ்ச்சிகளை வானொலி மையங்களுக்கும், ஒளி நிகழ்ச்சிகளை கல்வி செயற்கைக்கோள் பயன்பாடு நிறுவனங்களுக்கும் வழங்கவும் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் சார்ந்த கல்வி தொலைக்காட்சி படப்பதிவு நிலைய மென்பொருள் தயாரிப்புகளை ரூ.24.36 லட்சம் செலவில் மேம்படுத்த ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் மேற்படி கருத்துருவை 2005-2006ம் ஆண்டிற்கான பகுதி –II திட்டத்தில் அரசு பரிசீலித்து அதனை ஏற்றுக் கொண்டது. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் சார்ந்த தொலைக்காட்சி வழி கல்வி படப்பதிவு நிலைய மென்பொருள் தயாரிப்புகளுக்கு பின்வரும் இனங்களுக்காக ரூ.24.36 இலட்சம் (ரூபாய் இருபத்தி நான்கு இலட்சத்து முப்பத்தாராயிரம் மட்டும்) அனுமதித்து அரசு ஆணையிடுகிறது:-

| வ.எண். | ஒலி நிகழ்ச்சித் தயாரிப்புகள் | ரூபாய் |
|---|---|---|

| | | இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | பாடல் ஒன்றுக்கு ரூ.5000/- வீதம் 30 பாடல்களை இசையுடன் ஒலிப்பதிவு செய்ய (ரூ 5000 x 30) | 1.50 |
| 2 | ஒரு நிகழ்ச்சிக்கு ரூ.1500/- வீதம் 70 நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்ய (ரூ 1500 x 70) | 1.05 |

| வ. எண். | ஒளி நிகழ்ச்சிகள் தயாரிப்புகள் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | நிகழ்ச்சி ஒன்றக்கு ரூ.7500/- வீதம் 15 நிமிட கால அவகாசத்திற்கு உட்பட்ட 50 ஒளி நிகழ்ச்சிகளை உட்புறப் படப்படிப்பில் தயாரிக்க (ரூ 7500 x 50) | 3.75 |
| 2 | இரு நிகழ்ச்சிகளுக்கு ரூ.50000/- வீதம் 50 நிகழ்ச்சிகளை வெளிப்புற படப் பிடிப்பில் தயாரிக்க (ரூ 25,000 x 50) | 12.50 |
| 3 | ஒலி/ஒளி நிகழ்ச்சிகள் தயாரிப்புகளின் பொருட்டு பணிமனைக்கு ரூ.1.39 இலட்சம் வீதம் நடத்தப்பெறும் 4 வரைவு எழுதுநர் பணி மனைகளுக்கான செலவினம் (ரூ 1.39 இலட்சம் x 4) | 5.56 |
| | **மொத்தம்** | **24.36** |

3. மேலே பத்தி 2ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது:-

"2202 பொதுக் கல்வி - 02 இடைநிலைக் கல்வி -004 ஆராய்ச்சியும் பயிற்சியும் - 1 திட்டத்தில் சேராதது -AB தமிழ்நாட்டில் தொலைக்காட்சி வழி கல்வி திட்டம் - 19, இயந்திரமும் சாதனமும் -01 வாங்குதல் (த.தொ.கு.2202 02 004 AB 1910)."

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 20938 / Edn.I / 2005 நாள் 18.4.2005-ல் பெறப்பட்ட அத்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்,
சென்னை-6.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.

நகல்:

நிதித் (கல்வி-I) துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வித் (பட்ஜெட்) துறை, சென்னை-9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

அரசு சார்புச் செயலாளர்.